# சுவிசேஷ வலை



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

422 தேவனுடைய ராஜ்யம் ஒரு மனிதன் ஒரு வலையை எடுத்துக்கொண்டு, கடலுக்குள் போய் அதைப் போடுகிறதற்கு ஒப்பாயிருக்கிறது. அவன் அங்கிருந்து வரும்போது, அவன் ஆமைகளையும், தவளைகளையும், பாம்புகளையும், பல்லிகளையும், சிலந்திகளையும், மீனையும் வலையில் உடையவனாய் வருகிறான். அந்தவிதமாகத்தான் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.

423 கர்த்தர் சகோதரன் கிரஹாமைப் போன்ற ஒரு ஊழியக்காரனிடத்தில், "இங்கே போ; சகோதரன் கிரஹாம் இந்த மூலைக்குச் சென்று கொஞ்சங்காலம் மீனைப் பிடி" என்று கூறுவார். சரி, அப்பொழுது அவர் தன்னுடைய வலையை எடுத்துக் கொண்டு, அங்கே போய், மீன்பிடிக்கும் வலையை வீசத் துவங்குகிறார். "சகோதரன் பில், நீர் எங்கே போய்க்கொண்டிருக்கிறீர்?" "நான் எங்கோ வெளியே போய், இந்த மூலையில் வலையைப் போடுகிறேன்."

424 பின்னர், நான் வலையை இழுத்து, "கர்த்தாவே, அதோ அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யாராயிருக்கிறார்கள் என்பதை நீர்

அறிந்திருக்கிறீர்.” என்று கூறுகிறேன். நான் மீண்டும் வலையை இழுத்து, “சரி, கர்த்தாவே, இதோ அவர்கள் இருக்கிறார்கள்” என்று கூறுகிறேன்.

425 இப்பொழுது ஒரு ஆமை துவக்கத்தில் ஒரு ஆமையாகவே இருந்தது. நீங்கள் அதை வலையில் பிடித்தீர்கள். அது உண்மை. அந்தவிதமாகவே ஜனங்கள், “ஓ அல்லேலுயா! அல்லேலுயா! கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தேவனுக்கு மகிமை. அல்லேலுயா!” என்று உணர்ச்சிவசப்படுதலில் பிடிக்கப்படுகின்றனர். அவர்கள் அப்படியே வலையில் பிடிக்கப்படுகின்றனர், அவ்வளவுதான்.

426 அந்த பழைய ஆமையின் ஆவி அவர்களுக்குள் இருந்தால், அது நீடித்திருக்கப் போவதில்லை, எனவே அவர்கள், “நல்லது, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்...” என்கிறார்கள். இதோ அவன் போகிறான், திரும்பவும் ஊர்ந்து சென்று விடுகிறான்.

427 நன்னீர் நண்டு வகையான வயோதிகப் பெண்மணியோ, “ஆனால் என்னால் அதைப் புரிந்துக்கொள்ள முடியவில்லை” என்று கூறிவிடுவாள். புரிகிறதா?

428 குமாரி சிலந்தியோ கொஞ்ச நேரம் அங்கே அமர்ந்துவிட்டு, அவள், "பிளாப், பிளாப், பிளாப்" என்று, "அங்கே எப்படியும் அதில் எந்தக் காரியமும் இல்லை" என்று கூறித் திரும்பி விடுகிறாள்.

429 குமாரி சர்ப்பமோ, "ஓ, அவர்கள் ஒரு கூட்ட பரிசுத்த உருளைகள். அங்கே அதில் உள்ளதெல்லாம் அவ்வளவுதான். அவர்களை விட மேலான அறிவுள்ளவர்களிடத்திற்கு நான் செல்வேன்" என்று கூறுவாள். ஏன்? அவள் துவக்கத்திலேயே ஒரு சர்ப்பமாயிருக்கிறாள். சுவிசேஷ வலை அவர்களை அப்படியே பிடித்துவிட்டது, அவ்வளவுதான்.

430 **ஆனால் மீனோ எஜமானுடைய மேசைக்கு கொண்டு செல்லப்படுகிறது**. அவன் துவக்கத்திலேயே ஒரு மீனாயிருந்தான். அவனுடைய வித்து ஒரு மீனாயிருந்தது. அவன் ஒரு மீனாகவே துவங்கினான், தேவன் தம்முடைய மீனை உலகத்தோற்ற முதல் அறிந்திருந்தார். அல்லேலூயா!

431 நினைவிருக்கட்டும், அவை யாவும் அங்கே ஒரே சேற்றுத் தண்ணீரில் சுவாசித்துக் கொண்டிருந்தன. அவை யாவும் ஒரே சிற்றோடையில் சுவாசித்துக் கொண்டிருந்தன. அது

உண்மை. "நாம் எல்லாரும் .... ஒரே ஞானக் கன்மலையிலிருந்து பானம்பண்ணினோம். எல்லோரும் வனாந்திரத்தில் மன்னாவைப் புசித்தோம். மற்றவர்கள் புசித்த அதே மன்னாவையே காலேபும், யோசுவாவும் புசித்தனர். அவர்கள் யாவரும் வனாந்திரத்தில் மடிந்து போயினர். ஆனால் இருவர் மாத்திரமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு செல்ல தெரிந்து கொள்ளப்பட்டு அங்கு சென்றடைந்தனர். அது உண்மையே.

432 "நாம் எல்லோரும் ஒரே ஊற்றிலிருந்து பருகிவந்துள்ளோம்." ஆனால் பருகின யாவரும் இரட்சிக்கப்பட்டிருக்கவில்லை. நாம் யாவரும் ஒன்று சேர்ந்து சத்தமிட்டோம். நாம் யாவரும் ஒன்று சேர்ந்து களிகூர்ந்தோம். ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களே இரட்சிக்கப்பட்டிருக்கின்றனர். நீங்கள் கவனித்தீர்களா? அது, "கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்கத்தக்கதாக கடைசி நாட்களில் அந்த இரண்டு ஆவிகளும் மிக நெருக்கமாயிருக்கும்," என்று கூறப்பட்டுள்ளது. கூடுமானால். புரிகிறதா? அது உண்மையான தேவனுடைய ஆவியாய், நித்திய ஜீவனுக்கென்று முன் குறிக்கப்பட்டதாயுள்ளது.

~ 6 ~

★★★★★

